2005 மார்ச் 14]

திரு. என். ரெங்கநாதன்: அதேதான். அதனுடைய தொடர்ச்சிதான். முன்மாதிரி ஆய்வுக்காக மாண்புமிகு அம்மாவின் அரசால் ரூ.16 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது ஆய்வுப் பணிகள் துவங்கப்பட்டு இருக்கின்றன. Model Study முடிப்பதற்குக் கால அளவு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதா? ஆமெனில், எப்போது அந்தப் பணிகள் முடிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கூறியபடி, இதற்கும் ஆய்வுப் பணி --Bangalore CICEF Director மூலம் பணிகள் செய்வதற்கான அந்தப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன், அடுத்த கட்டமாக அந்தப் பணி சம்பந்தமாகச் செயல்பாடுகள் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 142, திரு. பி.ஆர். சுந்தரம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

142—

தமிழ்நாடு ஓட்டல்

***2123—திரு. பி. ஆர். சுந்தரம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாலையோர உணவு விடுதிகளை மேல்மருவத்தூரில் உள்ளதுபோல தமிழ்நாடு ஓட்டல் மூலம் எடுத்து நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாலையோர உணவு விடுதிகளை மேல்மருவத்தூரில் உள்ளதுபோல தமிழ்நாடு ஓட்டல் மூலம் எடுத்து நடத்த இயலாது.

திரு. பி. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நெடுஞ்சாலைகளில் இன்றைக்கு மாலை நேர வழியோர உணவு விடுதிகள் பெரிய அளவிலே நடைபெற்று வருகின்றன. அவர்கள் சுகாதாரமற்ற, தரக்குறைவான உணவைத் தயார் செய்கிறார்கள். அத்தகைய உணவை உண்பதால் நீண்ட தூரம் பஸ்ஸில் பயணம் செய்பவர்களுக்கு உடல்நிலை மிகவும் பாதிக்கப்படுகிறது. குறிப்பாக

சென்னையிலிருந்து திருநெல்வேலி, கன்னியாகுமரி, நாகர்கோவில் போன்ற நீண்ட தூரம் செல்லும் பயணங்களில் நல்ல உணவு கிடைக்காமல் அவர்கள் பெரிதும் அவதியுறுகிறார்கள். அந்தப் பயணிகள் பயணம் செய்யும் நேரமும் அதிக அளவிலே இருக்கிறது. நீண்ட தூரம் பயணம் செய்வதால் 2, 3 இடங்களில் எல்லாம் அவர்கள் சாப்பிட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலமாக நெடுஞ்சாலைகளில் முக்கியமான இடங்களிலாவது புதிய உணவகங்களை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. மில்லர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தற்போது 29 ஓட்டல்களை நடத்தி வருகிறது. அதில் மேல்மருவத்தூர், உளுந்தூர்பேட்டை, சாத்தூர் முதலியன சாலையோர விடுதிகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ளன. ஏராளமான தனியார் உணவகங்கள் தேசிய நெடுஞ்சாலைகளில் செயல்பட்டு வருகின்றன. புதிதாக ஓட்டல்களை நடத்துவதற்கு தளவாடச் சாமான்கள் வாங்குகின்ற வகையிலும், இருக்கின்ற சமையல் வசதிகளைப் பெருக்குகின்ற வகையிலும் நிதி ஆதாரம் அதிக அளவில் தேவைப்படுகின்றது. எனவே தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தற்போதுள்ள நிதிநிலை மற்றும் அரசின் தனியார்மயமாக்குதல் என்கின்ற நிலைப்பாட்டினால், மேலும் ஓட்டல்களை எடுத்து நடத்த இயலாத நிலையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு புதிய உணவகங்களை அமைப்பதற்கு வாய்ப்பில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். நான் குறிப்பிட்டுள்ள நெடுஞ்சாலைகளில் இருக்கின்ற அந்த ஓட்டல்கள் பலவற்றில் விலைப் பட்டியல்களை வைப்பதில்லை. ஆகவே, விலைப் பட்டியல் வைப்பதற்கும், தரமான உணவு வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. அ. மில்லர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆலோசனையைப் பெற்று, மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்தின்மீது தனிக் கவனம் செலுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2005 மார்ச் 14]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 143, திரு. எஸ்.எம். பாலன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

143—

தொழிற்பயிற்சிப் பயிலகம்

* **6687—திரு. எஸ். எம். பாலன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடியில் அரசு தொழிற்பயிற்சிப் பயிலகம் தொடங்க ஆவன செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) லால்குடி தாலுகாவில் ஏற்கெனவே 3 தொழிற்பயிற்சிப் பயிலகங்கள் இயங்கி வருவதால், லால்குடியில் அரசு தொழிற்பயிற்சிப் பயிலகம் துவங்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

திரு. எஸ். எம். பாலன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, லால்குடி தொகுதியில், லால்குடி ஒன்றியத்தில் ஆண்கள் மட்டும் பயிலும் 2 தனியார் I.T.I.-கள் செயல்படுகின்றன. லால்குடி தொகுதி, புள்ளம்பாடியில் ஒரு அரசு பெண்கள் I.T.I. செயல்படுகிறது. லால்குடி நகரப் பகுதியில் அரசு பெண்கள் I.T.I. ஒன்றிருந்தால், லால்குடி ஒன்றிய கிராமப்புறத்தில் வசிக்கும் ஏழையெளிய பெண்கள் மேம்பாடு அடையும் விதத்தில், அவர்கள் குறைந்த தூரத்தில், தொழிற்கல்வி படிக்க வசதியாக இருக்கும் என்பதால், இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அது துவக்கப்படுமா என்பதைப் பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. அண்ணாவி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, லால்குடி தாலுகாவிலுள்ள புள்ளம்பாடியில் 168 இருக்கைகளைக் கொண்ட மகளிருக்கான அரசுத் தொழிற்பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது. ஆகவே, லால்குடிக்கென்று தனியாக ஒரு அரசு மகளிர் தொழிற்பயிற்சி நிலையம் துவங்க அரசுக்கு உத்தேசம்